மீனாட்சி
புத்தக
நிலையம்



# உன்னைப்போல் ஒருவன்

ஜெயகாந்தன்

# வாசகர்களுக்கு

ஓ! நீங்கள் என்னென்ன கேள்விகள்தான் கேட்டிறீர்கள்?...

உங்கள் கேள்விகள் எல்லாம் எந்த அளவு இலக்கிய சம்பந்தமுடையது என்று ஒரு பெரிய இலக்கிய மேதை மாதிரி கண்டுப் பார்த்துக் கட்டி ஒதுக்கி விடுவது ரொம்ப சுலபம்தான்...

ஆனால் என் கதைகளைப் படித்துவிட்டு, ஓர் ஆர்வத்தின் 'அறிய விரும்பும் துடிப்போடு' நீங்கள் அவ்விதக் கேள்விகளைக் கேட்டிறீர்கள் என்பதை நான் மறக்கலாகாது அல்லவா?

உங்கள் கேள்விகள் சமூகத்தோடோ, இலக்கியத்தோடோ, தத்துவத்தோடோ சம்பந்தமற்றிருப்பினுங்கூட கேட்கப்பட்ட எனக்கு அவ்வித சம்பந்தங்கள் உண்டு என்ற நம்பிக்கையுடன் அல்லவா நீங்கள் கேட்டிறீர்கள்!

ஒரு பிரிய வாசகர் என்ற முறையில், ஒருவகை ஆவேச மிக்க ஆர்வத்தோடு—பல சமயங்களில் ஒரு குழந்தையின் அழகிய அசட்டுத் தனத்தோடு கூட—நீங்கள் கேட்கும் கேள்விகள் எவ்வளவு ரசமானவை தெரியுமா?...

அதே போதில் இத்தகைய உங்களது வெள்ளைக் கேள்விகளுக்காக உங்களை ஒரு கடின வார்த்தையின் மூலம் மனசு சுருங்க வைத்துவிட்ட சில 'பெரிய எழுத்தாளர்'களைப் பற்றி நீங்கள் என்னிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டபோது என் மனம் புண்பட்ட விஷயத்தை நீங்கள் அறிவீர்களா?

மீனாட்சி
புத்தக நிலையம்

Jacket Printed at
Commercial Printing & Publishing House, Madras.